# ,எம். ஜி. ஆரை. ராதாவே கொலைசெய்ய முயன்ருர்'

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 322
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஐப்பசி 4 றஜப் 16 சனிக்கிழமை [21-10-67]

## அரசாங்க தரப்பு வழக்கறிஞர் வாதம்

சென்னை, அக். 20

''வாசு ராதாவுக்கு மிக நெருங்கிய நண்பராக இருந்திருக்கிருர்; தான் சொல்வதையெல்லாம் வாசு நம்புவார் என்பதையும் ராதா தெரிந்து வைத்திருக்கிருர். இதனைப் பாவித்து எம். ஜி. ஆரை, ராதா கொலை செய்யமுயன்றிருக்கிருர்'' என்றுநேற்று அரசாங்க தரப்புவழக்கறிஞர் திரு பி. கே. கோகுலகிருஷ்ணன்கோர்ட்டில்தெரிவித்தார்.

சினிமா நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனை சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்ய முயன்றதாகவும் மற்ருெரு சினிமாநடிகரான எம் ஆர். ராதா மீது குற்றஞ்சாட்டி சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணைசெய்யப்பட்ட இவ்வழக்கில் அரசாங்க தரப்பு வழக்கறி

[6-ம் பக்கம் பார்க்க]

### நாடு முழுவதும் பேய் மழை

# கொழும்பில் வெள்ள அபாயம்

# துறைமுகத்தில் புயல்

## ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தவிப்பு

கொழும்பு, சனி

**நேற்று முழுவதும் நாடுபூராவிலும் கடும்மழை பெய்தது. இந்தமழையினுல்மிகமோசமாக இரத்தினபுரிமாவட்டம் பாதிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் துறைமுகத்தில் நேற்றுகாலை கடும்புயல் வீசியதால் கப்பல்கள் இடம்விட்டுப் பெயர்ந்தன.**

கொள்ளுப்பிட்டியில் கடல் கொந்தளித்து ரயில்பாலத்தையும் உடைத்துக்கொண்டு ஒரு வீட்டினுள் கடல்நீர் புகுந்து நாசம் விளைவித்தது. வீட்டிலிருந்தவர்கள் நேரத்தோடு வெளியேறியதால் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

காலநிலை இன்றும் மோசமாக இருக்கக்கூடும்என்று அஞ்சப்படுகிறது.

கொழும்பில் மழையினுல் நாலாயிரம் மக்கள்பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். பாதைகள் பலவும் போக்குவரத்துக்கு தடைப்பட்டுள்ளன. தாழ்ந்த பிரதேசங்களில் நீர் நிறைந்து விட்டதால் அப்பகுதிகளில் உள்ள மக்கள் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப் பட்டுள்ளனர்.

### பாடசாலைகள் கூரை பறந்தது

ஹல்ஸ்டோப்பிலுள்ள ஒரு முஸ்லிம் பாடசாலையின் கூரை சுழல்காற்றினுல்

[6-ம் பக்கம் பார்க்க]

## பத்தாயிரம் மக்கள் இரத்தினபுரியில் தவிப்பு

கொழும்பு, சனி

இரத்தினபுரி பிரதேசத்தில் கடந்த இரு தினங்களாக பெய்த அடைமழையினுல் பயங்கரமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். சுமார் 10 ஆயிரம் மக்கள் பாடசாலைக் கட்டிடங்களைத் தஞ்சம் புகுந்துள்ளார்கள்.

1948-ம் ஆண்டு இரத்தினபுரி பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கிற்குப் பின் இது மோசமான வெள்ளப்பெருக்கு என்று கருதப்படுகின்றது.

இன்று கொழும்பில் 7 அங்குல மழை பெய்துள்ளது இரத்தினபுரியிலும் 7 அங்குல மழை பெய்திருக்கின்றது. களுத்துறை பகுதியில் 6 அங்குல மழை பெய்திருக்கிறது. இரத்தினபுரி பஸ் நிலையத்தில் 4 அடிநீர் நிற்பதாகவும் அவிசாவளை, குருநாகலை, கிணிகத்தனை ஆகிய பகுதிகளில் பாதைகளில் போக்குவரத்து செய்யமுடியாதென்றும் போக்குவரத்து சங்கம் அறிவித்துள்ளது.

## 'முல்லைத்தீவு கண்ணன் மரணவிசாரணையில் தாமதமேன்?'

வவனியா. வெள்ளி

முல்லைத்தீவு கண்ணன் என்ற சிறுவனின் மரணம் சம்பந்தமாக பொலிஸார் விசாரணை செய்து சம்பந்தப் பட்டவர்களைக கண்டுபிடிப்பதில் அசிரத்தையாகவுள்ளனரென்று வவனியா எம. பி. திரு. ரி. சிவசிதம்பரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் எம். பி. மேலும் தெரிவித்திருப்பதாவது:-

எத்தனையோவிதமான மர்மக் கொலைகளை துப்புத் துல

(6-ம் பக்கம் பார்க்க)

### இன்று செனட்டர்கள் தெரிவு

கொழும்பு, சனி

புதிய செனட்டர்க்ள், அரசாங்க பாராளுமன்ற குழுவினுலும். எதிர்க் கட்சியினுலும் இன்று தெரிவு செய்யப்படுவார்கள்.

### இன்று விசாரணை

யாழ்ப்பாணம், சனி

கொடிகாமம் கலவரம் சம்பந்தப்பட்ட வழக்குகள் இன்று காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்படும்.

### யூ. என். பி. மகாநாடு

கொழும்பு, வெள்ளி

ஐக்கிய தேசிய கட்சியின் வருடாந்த மகாநாடு ஸ்ரீகொத்தாவில் நவம்பர் 30-ம் தேதி ஆரம்பமாகி இருதினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

## ஒன்றரை லட்சம் மக்களுக்கு 120 பால்டின்கள்

### யாழ்ப்பாணம் கூட்டுறவு சமாஜம் திண்டாட்டம்

– நமது விசேஷ நிருபர் –

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கூட்டுறவு சமாஜத்தினர் தமது சங்கக் கடைகளுக்கும் கூப்பன் கடைகளுக்கும் பால் டின்களை எவ்வாறு விநியோகிப்பது எனத் தெரியாது தடுமாற்ற மடைந்துள்ளதாகத் தெரிகிறது.

ஒரு லட்சத்து 40 ஆயிரம் கூப்பன்காரர்களுக்கு 140 சங்கக்கடைகள், கூப்பன் கடைகள் ஆகியவற்றின் மூலம் பால்டின்கள் விநியோகிக்கவேண்டியுள்ள இச் சமாஜத்தினருக்கு சுமார் 120 பால்டின்கள் வழங்கப் பட்டுள்ளதாலேயே இவ்வித நிலையேற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அக்டோபர் மாதத்துக்கு கூப்பன்காரர்களுக்கு இவ்வளவு சிறியதொகையான டின்பால்களை வைத்துக் கொண்டு எவ்விதம் விநியோகிப்பது என்பது சமாஜத்தினரை எதிர்நோக்கியிருக்கும் பெரிய பிரச்னையாகவிருப்பதாகத் தெரிகிறது.

### காலநிலை எச்சரிக்கை

கொழும்பு, வெள்ளி

இலங்கையின் வடமேற்கு பிரதேசத்துக்கு 150மைல் தொலைவில் காற்றழுத்த மண்டலம்ஒன்று உருவாகி நகர்ந்து கொண்டிருக்கிறது. இதனுல் அடுத்த இருபத்திநாலு மணித்தியாலத்துக்கும் கடலில் செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் எச்சரிக்கப் பட்டுள்ளனர்.

### சமாதான மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

சங்கானையில் மீண்டும் இம் மாதம் 24-ந்திகதி சமாதான மகாநாடொன்று நடைபெறவிருக்கின்றது. வடபகுதி பொலிஸ்சுப்பிரின்டன்ட்திரு ஆர். சுந்தரலிங்கத்தினுல் கூட்டப்படும். வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம், சங்கானைப்பட்டினசபைத் தலைவர் திரு சி. கே, திருச்சிற்றம்பலம் ஆகியோர் உட்படசிறுபான் [illegible] இக் [illegible] அழைக்கப்பட்டுள்ளனர்.

[ந. நி.]

## சுறுசுறுப்பாக நடந்த பெல்மதுளை இடைத் தேர்தல்

இரத்தினபுரி, வெள்ளி

பெல்மதுளை இடைத்தேர்தல் இன்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5 மணிக்கு முடிவடைந்தது.

வாக்களிப்புசுறுசுறுப்பாக நடந்தது. எதிர்க்கட்சித் தலைவர்களும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களும் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று பார்வையிட்டனர். ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திருமதிசீதா செனிவிரத்தினவும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த திரு. டபிள்யூ. ஏ. தர்மதாசாவும் இந்த இடைத் தேர்தலில் போட்டியிட்டனர்.

## தீபாவளி!

பண்டிகையை முன்னிட்டு

விசேஷ மலிவு விற்பனை

ஆரம்பம்: 19-10-67

## சாறி எம்போறியம்

124, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் எல்லையற்ற அன்புள்ளவர். அவர் மீது நாம் அன்பு செலுத்தவேண்டுமென்பதில்லை. ஆனால் கடவுள் அன்பே வடிவானவரென்பதை உணரவேண்டும். அதை உணர்ந்துவிட்டால், எல்லா உயிர்களிடமும் நமக்குஅன்பு பிறந்துவிடும். அதுதான் இன்பத்துக்கு வழி.

— சுவாமிராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram:, EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க௵ ஐப்பசி௴ 4உ (21-10-67)


## "கடன் உதவிகள்"

சென்றஆண்டிலேஏழை நாடுகளுக்கு பிரிட்டன் அளித்த கடன் உதவிகளில் 100க்கு 90 வீதம் வட்டி யில்லாதவையாம். மற்ற பணக்கார நாடுகளும் இவ்விதமே கடன் நிபந்தனைகளை எளிய நாடுகளுக்குத் தளர்த்தவேண்டும் என்றும் பிரிட்டிஷ் பிரதிநிதி சேர். எட்வர்ட் வார்னல், ஐ. நா. சபையில் பேசுகையில் வற்புறுத்தியுள்ளார். இது வரவேற்கத்தக்கதே. இந்தக் கோரிக்கையால் ஏதாவது நல்ல பலன் ஏற்படுமா என்பது இனித்தான் தெரியவேண்டும்.

அல்ஜீரியாவில் கூடியுள்ள "அபிவிருத்திஅடைந்துவரும்நாடுகள்" என்று கூறப்படும எளிய தேசங்கள், பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள தேசங்கள், தங்களுக்கு நியாயம் வழங்கவில்லையென்று ஏகோபித்துஅபிப்பிராயம் தெரிவித்துள்ளன. தங்களதுமூலப்பொருட்களுக்கு நியாயபான உத்தரவாத விலைஅளிக்கவேண்டுமென்றும் கேட்டுள்ளன. இந்தக்கோரிக்கைக்கு பிரிட்டன் உள்ளிட்டுமற்ற முன்னேறியுள்ள நாடுகள் என்னபதில் கூறப்போகின்றன என்பதே கேள்வி.

வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளி அதற்கே நிவேதனம் செய்ததாகக் கதையுண்டு. அதுபோல நமது உற்பத்திப் பொருளான தேயிலை, ரப்பர் முதலியவற்றுக்கு நியாயமான விலை கொடுத்து வாங்குவதாயின் அதுவே பெரிய உபகாரமாகும். அப்படியின்றி, நமது தேயிலைக்கும் ரப்பருக்கும் விலையை ஏதேதோ தூரிசமங்கள் செய்து குறைத்துவிட்டு, கடனுதவி அளிப்பதாகச் சொல்லுவது யாரையும் திருப்திப்படுத்தமுடியாது நமக்கும் மற்ற எளிய நாடுகளுக்கும் பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகள் உண்மையில் உதவ விரும்பினல், அல்ஜீரிய மகாநாட்டின் கோரிக்கைகளை கவனித்து, இலங்கை உள்ளிட்ட எளிய நாடுகளின் விவசாய மூலப்பொருட்களுக்கு, நியாயமான உத்தரவாதவிலை கொடுக்கத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

வாங்கும் கடன்களை வட்டியும் முதலுமாகத் திருப்பித் தரவேண்டிய பெரும் பொறுப்பு எளிய நாடுகளுக்குண்டு. வட்டிக்குக் கடன் கொடுப்பதை 'உதவி' என்று சொல்லுவதற்கில்லை. உலக வங்கி, ஆசிய வங்கி முதலியன 'உதவி' என்ற பெயரால் அதிக வட்டி வாங்குகின்றன. பலவருடகாலமாகப் பொருளாதார சுரண்டலகளுக்கு உள்ளாக்கப்பட்ட நாடுகளுக்கு இலவசமாக இன்றும் பல வருட காலத்துக்கு உதவி அளிக்க வேண்டிய கடமை ஏகாதிபத்திய வல்லரசுகளுக்குண்டு. அப்படிச் செய்யாவிட்டாலும் குறைந்தது. நமது விவசாயப் பொருள்களுக்கு குறைந்த அளவு உத்தரவாத விலையை நிர்ணயித்து அதையாவது கொடுக்க முன்வந்தால், நமது அபிமானத்தைப் பெற முடிவதாக இருக்கும். நம்மைக் கடன்கார நாடுகளாக்கி பொருளாதார அடிமைத்தனத்தில் நீடித்து சிக்கவைப்பதாயின் அது வெகுகாலம் சகிக்கப்படமாட்டாது.

# ஆசிரிய பிரதிநிதிகள் அடங்கிய சம்பள நிர்ணயக் கமிஷன்

## நியமிக்கப்படவேண்டும் என்கிருர்கள்

## வட மாகாண ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின் சம்மேளத்தினல் உருவாக்கப்பட்ட பன்னிரு கோரிக்கைகளுக்கு வட மாகாண ஆசிரியர் சங்கம் ஆதரவு தேடும் முகமாக யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள சகல பாராளுமன்ற அங்கத்தவர்களையும் அழைத்து இக்கோரிக்கைகளை எடுத்து விளக்கவேண்டுமென்ற தீர்மானத்திற்கிணங்க வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகசபை இவ்வார இறுதியில் பாராளுமன்ற அங்கத்தவர்களை அழைத்து நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை, ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், ஆகிய எம். பி.க்கள் நால்வரும் சமுகமளித்து பன்னிரு கோரிக்கைகள் பற்றி விரிவாக ஆராய்ந்தார்கள். நிர்வாக சபையினர் கோரிக்கைகள் பற்றி விளக்கிப்பேசியதுடன் கல்வி இலாகாவினல் திட்டமிட்டிருக்கும் புதிய பாடசாலை அமைப்பு முறை இலவசக் கல்விக்குக் குந்தகம்விளைவிக்குமெனவும் சுட்டிக்காட்டினர்கள்.

அரசாங்க சேவையிலோ மற்றும் துறைகளிலோ வேலைசெய்யும் உத்தியோகத்தர்களுடைய சம்பளங்களை ஆசிரியர் சம்பளங்களோடு ஒப்பிடும்போது ஒரே கல்வித்தராதரமுடையவர்களுடைய சம்பளங்கள் ஏனைய தொழில்களிலும் பார்க்க ஆசிரியத் தொழில் மிகவும் குறைவாக இருப்பது பிரதானமாகச் சுட்டிக்காட்டப்பட்டது. காலத்துக்குக் காலம் நியமிக்கப்பட்ட சம்பள நிர்ணயக்கமிஷன்கள், ஆசிரியர்களுடைய சம்பளங்களை ஆராய்ந்து திருப்திகரமான சிபார்சுகளைச் செய்யக்கூடிய விசேஷ கமிஷன் அமைக்கப்படவேண்டுமென வற்புறுத்தியிருந்தபோதிலும், அரசாங்கத்தினல் இது புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. இதனல் ஆசிரியர்களிடையே திருப்தியின்மை ஏற்பட்டுள்ளதாகவும் ஆசிரியர்கள் கண்ணியமான முறையில் வாழ்க்கையை நடாத்துவதற்கு ஏற்ற சம்பளம் இதுகாறும் வழங்கப்படாமையினல் மனக்கசப்படைந்துள்ளனரெனவும்கூறப்பட்டது. எனவே ஆசிரியர்களது சம்பளத்திட்டங்களை ஆராய்வதற்கு ஆசிரியப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு விசேஷ கமிஷன் உடனடியாக நியமிக்கப்படவேண்டுமெனவும் அதுவரையும் மூன்று மாதச் சம்பள உயர்வுப்படிகள் அல்லது ரூபா 30, எது கூடியதோ வழங்கப்படவேண்டுமென அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்கள். இவைகள் விரைவில் கவனிக்கப்படாவிட்டால ஆசிரியர் திருப்திகரமான பணிபுரிய முடியாது என்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

மேலும் இளைப்பாற்று சம்பளவிஷயத்தில் ஆசிரியர்களுக்கும் அரசாங்க சேவையிலுள்ளோருக்குமிடையே யுள்ள வித்தியாசம் நீக்கப்படுமெனச் சிம்மாசனப் பிரசங்கத்தின்போது கூறப்பட்டிருந்தும் அரசாங்கம் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதிருப்பது எமக்குப் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

இடமாற்றசபைகளில் ஆசிரியர்க்குப் பிரதிநிதித்துவம் அளித்தல், பாடசாலை ஆசிரியர்சேவை சம்பந்தமான விஷயங்களில் ஆசிரியர்களைக் கலந்தாலோசித்தல், ஆசிரியசங்கங்கள் அனுப்பும் கடிதங்களுக்கு கல்வி இலாகாவினர் மறுமொழி எழுதல் போன்றவை உடனடியாகக் கவனிக்கப்படவேண்டுமெனவும் வற்புறுத்தப்பட்டது.

ஆசிரியர்களின் பதவி உயர்வு ஒழுங்கு நடவடிக்கை போன்றவற்றை நிதானமாகச் செய்யவேண்டுமானல் ஆசிரியப் பிரதிநிதிகளை உள்ளடக்கியதும் அரசியல் தலையீட்டுக்கு அப்பாற்பட்டதுமான கல்விச்சேவைக்குழு ஒன்று விரைவில் அமைக்கப்படவேண்டுமெனவும் அப்படியான ஓர்சபைஇயங்கினல்தான் நாட்டில் இடம்பெற்றுள்ள 1,35,000 ஆசிரியர்களுக்கும் எந்த அரசாங்கமும் நியாயம் வழங்க முடியும் எனவும், ஆசிரியர் அரசியல் தலையீடு முதற்கொண்டு எந்தவிதமான தலையீடுமற்று பகடைக்காய்களாகக் கணிக்கப்படாது நாட்டில் வாழ முடியுமெனவும் எடுத்துக் காட்டப்பட்டது.

ஆசிரியர்கள் அந்தஸ்துசம்பந்தமாக ஐக்கிய நாடுகள்

[6-ம் பக்கம் பார்க்க

## "நம் முன்னேரை நினைவு கூரவேண்டும்"

### மட்டக்களப்பு எம். பி. கூறுகிறர்

உரும்பராய், வெள்ளி

"மேலைத் தேசத்தவர்கள் தம் மத்தியில் வாழ்ந்த இலக்கிய கர்த்தாக்கள், அறிஞர்கள், ஆகியோருக்குத் தகுந்த நினைவுச் சின்னங்கள் அமைத்து தமது பண்டைய பெருமைகளை நிலைநாட்டுகின்றனர். இதனல் தமது எதிர்காலத்துக்குரிய வழிவகைகளைத் தாமாகவே சுயமாகச் சிறப்புற அமைத்துக் கொள்ளக்கூடியதாக விருக்கிறது."

உரும்பராய் இந்துக்கல்லூரி சரித்திர அரசியல் மாணவர் மன்றத்தின் விசேஷ கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய மட்டக்களப்பு முதல் எம். பி. யும் மேயருமான திரு. செ. இராசதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார். திரு. வி. புஷ்பராசா இக்கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. இராசதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது.

"நாட்டினதும், இனத்தினதும் எதிர்காலம் மாணவர் சமுதாயத்தின் முன்னேற்றத்தில்தான் தங்கியுள்ளது. தமிழ்மக்களின் எதிர்காலம் வளம்பெற நம்முன்னேரின் நாகரீக வாழ்க்கை முறைகளை நினைவுகூர்ந்து தகுந்த வழியில் ஒழுகுதல் வேண்டும்." எஸ். சற்குணநாதன் நன்றிகூறினர்.

### இன்றைய பலன்

21-10-67

சனிக்கிழமை

(ஐப்பசி மாதம் 3 உ)

நட்சத்திரம்-கார்த்திகை இரவு 9-44 மேல் ரோகினி.

திதி- திருதியைஇரவு 9-35 மேல் சதுர்த்தி.

சுபநேரம்- 3-02 — 4-32.

ராகுகாலம்- 9-02 — 10-32.

மேஷம்- திரைமறைவில் சதி, திறமைதடைப்படும்.

ரிஷிபம்- ஏக்கம், தாக்கும், தூக்கம் கெடும்.

மிதுனம்- கனிவான நினைவு, இனிதான நிகழ்ச்சி.

கடகம்- வேண்டாத நட்பால் விபரீதம் விளையும்

சிம்மம்- வாகன சுகம், வளம்தரும் வாழ்வு.

கன்னி- தெளிந்த மனம் தேன் சொட்டும்வாழ்வு.

துலாம்- பாதையில் பழுதுண்டு பயணத்தைத் தவிர்.

விருச்சிகம்- உள்ளமும் துள்ளும், உண்மையும் வெல்லும்.

தனுசு- இன்னலின்பின்னல், சிக்கல்கள் மிகுதி.

மகரம்- தந்தை வழி நலன், தனமுமுண்டு.

கும்பம்- பயன் தரும் பயணம் பழைய நினைவுகள்.

மீனம்- என்னதான் நடப்பினும், நினைத்தது முடியும்.

திருமலை வேலுப்பிள்ளை

## நாத்தாண்டியா உப தேர்தல்

### நவம்பர் 11-ல் நியமனங்கள்

கொழும்பு, வெள்ளி

நாத்தாண்டியா உபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் நவம்பர் 11-ந் திகதியன்று, புத்தளம் கச்சேரியில் ஏற்றுக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாட்டிலும் நகரிலும்

தாலி என்பது நமது தமிழ்ப் பெண்கள் ஆதிகாலம்தொட்டு அணிந்து வரும் ஒரு புனித சின்னம். கன்னிப்பருவம் நீங்கி ஒருவள் ஒருகணவனின் கையை பிடித்துவிட்டாள் என்பதைக் குறிக்கும் ஓர் அடையாளம். தமிழ்ப் பெண்ணினம் இன்றுவரை அதைத் தமது கணவன்மாரின் பிரதிநிதியாகவும, தங்கள் கற்பின் அணிகலனகவும் பேணிப் போற்றி வருகிருர்கள்.

மஞ்சளும், குங்குமமும் ஒரு பெண் சுமங்கலி என்பதை உலகத்தாருக்கு எடுத்துக் காண்பித்து வருகின்றன. கணவனை இழந்தவள் கணவன் கட்டிய தாலியை கழற்றி வைத்து விடுவாள். நெற்றியில் குங்குமம் இடமாட்டாள். அவள் இப்பொழுது அமங்கலி.

தாலிகட்டும் வழக்கம் முதலில் ஒரு பெண்ணின் குடும்ப நிலையைக் காட்டுவதற்காக ஏற்பட்டது. அப்பொழுது மஞ்சள்கயிற்றில் தாலியைக் கோர்த்துக் கழுத்தில் அணிந்து கொண்டார்கள். பின்பு தாலிக்கொடி என்பதாக ஒன்று ஏற்பட்டது. மஞ்சள் கயிற்றுக்குப் பதிலாக மஞ்சள் நிறமுள்ள தங்கக்கொடியில் தாலியைக் கோர்த்துக் கட்டும் வழக்கம் ஏற்பட்டது.

இன்னும் சிறிது காலம் போக, பணத்தைச் சேமித்து வைப்பதற்காக இந்த தாலி உபயோகப்பட்டது. பணம் பணமாக இருந்தால் அது வீண் விரயமாகி விடலாம். சேமிப்பு வங்கிகள் இல்லாத காலத்தில் பணச்சேமிப்பு அனைத்தையும் பொன்னுபரணங்களாக மாற்றி பெண்கள் அணிந்தார்கள். தாலிக்கொடி, சங்கிலி, அட்டியல், ஒட்டியாணம், தோடு, மூக்குத்தி, தொங்கட்டான்முதலியவை தோன்றின. இதனல் பெண்களுக்கு இயற்கையாகவுள்ள அலங்கார விருப்பம் திருப்தியானதோடல்லாமல் மேற்சொன்ன ஆபரணங்களை அணியும் பெண் நடமாடும் வங்கியாகவும் விளங்கினள்.

இப்பொழுதெல்லாம் காலம் மாறி விட்டது. ஒரு கையில் 'றிஸ்ட் வாச்சும்' மற்றக் கையில் பிளாஸ்டிக் வளையல்களும் அணியும் யுகம். ஆனல் தாலிமட்டும் மாறவில்லை.

பத்து, பதினைந்து தங்கப் பவுனில் தாலி கட்டிக் கொண்டால் அது ஒரு பெருமை என்று பெண்கள் கருதுகிருர்கள். இது சில சமயம் விபரீதமாக முடிந்து விடுகின்றது, தாலிக் கொடியிலுள்ள தங்கப் பவுண் எவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கு அதை அணியும் பெண்ணின் உயிருக்கும் ஆபத்து அதிகமாகிறது.

சமீபத்தில் ஒரு பிரமுகரின் மனைவி அணிந்திருந்த தாலி பலாத்காரமாக கழுத்திலிருந்து பிடுங்கி எடுக்கப்பட்ட சம்பவம் எமது பெண்களின் கண்களை திறக்க ஏதுவாயிருக்கும். அந்த அம்மணி திருடனுக்கு எதிர்ப்பு கொடுத்திருந்தால் அவரின் உயிருக்கு ஆபத்து வருமோ வராதோ?

பத்து, பதினைந்து தங்கப் பவுணில் தாலிக் கொடி அணிய வேண்டியது அவசியம் தானு? பழைய கால வழக்கப்படி மஞ்சள் கயிற்றில் தாலியைக் கோத்து அணிந்து கொள்ளலாகாதா? அப்படித் தான் தங்கக் கொடி வேண்டுமென்றுலும் அதை பகலிலும் இரவிலும் கழுத்தில் அணிந்து கொண்டிருக்க வேண்டுமா?

இக், கேள்விகளை நமது முன்னேறும் பெண்ணினம் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் பல நகரங்களிலும் வியட்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## பலர் கைது செய்யப்பட்டனர்

**வாஷிங்டன், ஒக்டோபர் 20**
**அமெரிக்காவில், வியட்னும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் அதிகரித்துவருகின்றன. நேற்று நான்காவது தினமாகப் பல நகரங்களிலும், வியட்னும் போரை எதிர்த்து நூற்றுக்கணக்கானோர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.**

கலிபோர்ணியாவிலுள்ள ஒக்லாண்ட் நகரில், நேற்றைய ஆர்ப்பாட்டங்கள் அமைதியாக நடைபெற்றன

சிக்காக்கோவில், 20 ஆர்ப்பாட்டக்காரரைப் பொலிசார் கைதுசெய்தனர்.

புருக்லினில், 62 பேருக்குமதிகமானோர் கைதுசெய்யப்பட்டனர்.

விஸ்கொண்ஸின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 14 மாணவர்கள்' பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

### வாஷிங்டனை நோக்கி

வார இறுதியில், வாஷிங்டனிலுள்ள அரசாங்கக் காரியாலயக் கட்டிடமான 'பென்டாகனை' நோக்கி, வியட்னும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர், ஒரு மாபெரும் ஊர்வலத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

1967

## இலக்கியத்துக்கான நோபல் பரிசு

கவுட்டாமாலா, ஒக். 20
கவுட்டாமாலாவைச் சேர்ந்த திரு. மிக்வேல் ஏஞ்சல் அஸ்தூரியஸ் என்பவருக்கு 1967-ம் ஆண்டுக்கான இலக்கிய நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது.

இவர் தற்போது கவுட்டாமாலாவின் தூதுவராகப் பாரிசில் கடமையாற்றுகிறார்.

'லத்தீன் அமெரிக்க, இந்தியர்களின் பழக்க வழக்கங்கள்' என்ற அவரது நூலுக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

# பிரிட்டனில் வேலைநிறுத்தம்

லண்டன், ஒக். 20
பிரிட்டிஷ் துறைமுகங்களில் ஏற்பட்டுள்ள வேலைநிறுத்தம், இப்போது பிரிட்டிஷ் ரயில்வேக்கும் பரவியுள்ளது.

**இதன்விளைவாக,** தமது ஸ்கொத்லாந்துப் பயணத்தை முடித்துக்கொண்டு, பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன், லண்டன் விரைந்துள்ளார். அவர் தமது மந்திரிகளுடனும், தொழிற்சங்கத் தலைவர்களுடனும், இவ் வேலைநிறுத்தங்கள் பற்றி விவாதிப்பார்.

நேற்று, பிரிட்டிஷ் ரயில்களில் கடமையாற்றும் கார்ட்டுகள், தமது தொழிற்சங்கங்களின் உத்தரவுக்கிணங்க, வேலைநேரத்தில் வெளிநடப்புச் செய்தனர். இதன் விளைவாக, பல பிரயாணிகள் சேவைகள் பாதிக்கப்பட்டன, சரக்குகள் போக்குவரத்தும் தடைப்பட்டது.

## கிளிநொச்சிக்குப் புதிய பஸ்நிலையம்

**கிளிநொச்சி, வெள்ளி**
கிளிநொச்சி இ. போ. ச. மத்திய பஸ் நிலையம் நிறுவுவதற்கு சேவ்வீப் பத்திரம் அரசாங்க வர்த்தமானி மூலம் கேட்கப்பட்டுள்ளது. இந் நிலையத்தை இவ்வருட முடிவுக்குள் நிறுவிக் கொடுக்கவேண்டுமென கேள்வி அறிவித்தல் கூறுகின்றது. கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினரின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்த விரைவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# பிரதமர் டட்லிக்கும் அழைப்பு அனுப்பப்படும்

கோலாலம்பூர், அக். 20
அடுத்த வருடம் ஜனவரியில் சென்னையில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டுக்கு இலங்கைப்பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவுக்கும் விசேஷ அழைப்பு அனுப்பப்படும். இந்தத் தகவலை மலேஷிய சர்வ கலாசாலை தமிழ்துறை பேராசிரியர் வண. பிதா தனிநாயகஅடிகளார் இங்கு வெளியிட்டார்.

இலங்கையிலிருந்து பார்வையாளர்களாக உலக தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளவிரும்புபவர்கள், இலங்கை கிளையுடன் தொடர்புகொள்ளலாமென வண. பிதா தனிநாயக அடிகளார் தெரிவித்தார்.

## கருத்தரங்கு

குரும்பசிட்டி, வெள்ளி
சுன்னுகம் பட்டினசபை நூல்நிலைய ஆராய்வுக்குழுவின் ஆதரவில் மேற்படி நூல்நிலைய மண்டபத்தில் புதன்கிழமை மாலை நடைபெற்ற போயாதினக் கருத்தரங்கில் பிரதம பேச்சாளராக மல்லாகம் நீதிபதி ரீ. எஸ். நெத்தசிங்கா கலந்துகொண்டார். ''குற்றம் புரிதலைப்பற்றிய மனுேதத்துவம்'' என்ற பொருள் பற்றி நீதிபதி விசேஷ உரை நிகழ்த்தினுர்.

# கெயிரோவில் இந்திய பிரதமருக்கு உற்சாகம் ததும்பிய வரவேற்பு

## நாஸருடன் பேச்சுவார்த்தைகள்

கெய்ரோ, ஒக். 20
இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி நேற்று ஐக்கிய அரபுக் குடியரசு ஜனுதிபதி நாஸரைச் சந்தித்து நீண்டநேரம் பேசினுர். திருமதி இந்திராகாந்திக்கு நேற்றிரவு அளிக்கப்பட்ட இரவு விருந்தொன்றில், இரு தலைவர்களும் சந்தித்தனர்.

தாம்யூகோஸ்லாவிய ஜனுதிபதிடிட்டோவுடனும், ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினுடனும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் சாராம்சத்தைத் திருமதி இந்திரா, நாஸரிடம் தெரிவித்தார். தாம் விஜயஞ்செய்த மற்றக் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், அரபு நாடுகளுக்கு ஆதரவான உணர்வே நிலவுவதாகவும், பிரதமர் இந்திரா தெரிவித்தார்.

முன்னதாக திருமதி இந்திராகாந்தி, கெயிரோவுக்கு வந்துசேர்ந்தபோது, மிகவும் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை விமானநிலையத்தில், ஜனுதிபதி நாஸரும், ஐ. அ. கு. உபஜனுதிபதிகள் மூவரும் வரவேற்றனர். வழிநெடுகிலும், தெருவின் இருமருங்கிலும் கூடிநின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள், பலத்த கோஷமிட்டுத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர்.

## சுக்கிரன் மேலாக அமெரிக்க விண்கலம்

வாஷிங்டன், ஒக். 20
அமெரிக்காவின் விண்வெளிக்கலமான 'மாரினர்-5' நேற்றுச் சுக்கிரன் கிரகத்துக்கு மேலாகப் பறந்து சென்றது.

ரஷ்யாவின் விண்வெளிக்கலம் சுக்கிரனில் மெதுவாகத் தரையிறங்கி 1 1/2 நாட்களுக்குப்பின் இவ் அமெரிக்க விண்வெளிக்கலம் சுக்கிரனுக்கு மேலாகச் சென்றுள்ளது.

## மலேரியா தடுப்பு முயற்சி

பண்டத்தரிப்பு, வெள்ளி
மலேரியாவை முற்ருகத் தடைசெய்யும் நோக்குடன் சுகாதாரப்பகுதியினர் மலேரியாத் தடுப்பு ஊழியர்களை மாதாமாதம் வீடுகளுக்கு அனுப்பிப் பரிசோதனை நடத்திவருகின்றனர்.

## சாரணர் முகாம்

கிளிநொச்சி, வெள்ளி
வவனியா வித்தியானந்தாக் கல்லூரி சாரணர்கள் உருத்திரபுரம் ஏழாம் வாய்க்கால் பாடசாலையில் முகாமிட்டு மூன்று தினங்கள் பயிற்சி நடத்தினர். உருந்திரபுரம் சாரணர்களும் இதில் கலந்துகொண்டனர். இரண்டாம் நாள் நிகழ்ச்சியை கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் தொடக்கிவைத்தார். வித்தியானத்தாக்கல்லூரி அதிபர் திரு. வ. பொன்னம்பலம் இந்தஒழுங்குகளைச் செய்திருந்தார்.

## மருந்து எடுத்து செல்கையில் மரணம்

சங்கானை, வெள்ளி
மாதகல் செட்டிசேணிக் கரையைச் சேர்ந்த பொன்னுத்துரை செல்வபாக்கியம் [வயது30] பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரியில் மருந்து எடுத்துச் செல்கையில் வழியிலேயே இரத்த வாந்தியெடுத்து மரணமானுர். இப் பெண் அண்மையில் தான் குழந்தை ஒன்றைப் பிரசவித்திருந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு.கே.சேனுதிராசா இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

# கட்சி மாறுபவர்கள் பற்றி அண்ணு

சென்னை, ஒக். 20
சட்டசபை அங்கத்தவர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறுவதைத் தமிழக முதல் மந்திரி திரு. அண்ணுதுரை கண்டித்துள்ளார்.

கட்சி மாற விரும்பும் சட்டசபை உறுப்பினர், முதலில் தமதுதொகுதியில் மீண்டும் தேர்தலில் நிற்கவேண்டும் அல்லது பொதுஜன வாக்கெடுப்புமூலம் தொகுதி மக்களின் விருப்பத்தைப் பெறவேண்டுமென்று திரு. அண்ணுதுரை குறிப்பிட்டுள்ளார்.

உ. பி. யில்

## சமரசத்துக்கு ஒரு கமிட்டி

லக்னுே, ஒக். 20
உத்தர பிரதேச மந்திரிசபையில் ஏற்பட்டுள்ள தகராறைத் தீர்க்க, ஆளுங் கட்சியான ஐக்கிய முன்னணியின் 6 கட்சிகளின் தலைவர்களும், ஏழு அங்கத்தவர்களடங்கிய ஒரு கமிட்டியை நியமித்துள்ளனர்.

இக்கமிட்டியின் ஏகமனதானமுடிவுகள் யாவும்சகல அங்கத்துவக் கட்சிகளையும் கட்டுப்படுத்துவதாக அமையுமெனக் கூறப்படுகிறது.

வியட்னுமில்

## 14,000 அமெரிக்கர் உயிரிழந்தனர்

சைகோன், ஒக். 20
வியட்னும் போரில் உயிரிழந்த அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை, இதுவரை 14,000 என அறிவிக்கப்பட்டுள்ளது, காயத்துக்குள்ளானவர்கள், 88,000 க்கு மதிகமானேர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பத்திரிகை உலகில் புதிய புரட்சி

லண்டன், ஒக். 20
லண்டனில் வெளியாகும் 'டெயிலி எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் முதல் பக்கம் முழுவதும் பதினைந்தே நிமிடங்களில் லண்டனிலிருந்து அட்லான்டிக் சமுத்திரத்தைக் கடந்து தென் அமெரிக்காவிலுள்ள போர்ட்டோ றிக்கோ என்னுமிடத்துக்கு இன்று அனுப்பப்பட்டது.

பத்திரிகைஉலகில் பெரும் புரட்சி எனக் கருதப்படும் இப்புதிய சாதனை விண்வெளியில் பூமியை வலம் வந்து கொண்டிருக்கும் செய்மதியின் உத[illegible] நிறைவேறியது.

# அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் முக்கிய மாற்றங்கள்

## ருமேனியாவின் ஆலோசனை

ஜெனீவா, ஒக். 20
ஜெனீவாவில் நடைபெறும் ஆயுத பரிகரண மாகாட்டில், உலகதேச அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் சில முக்கிய மாற்றங்களை, ருமேனியா பிரேரித்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் எல்லா நாடுகளும், தமது அணு ஆயுத உற்பத்தியைச் சர்வதேச பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டுமென, மாநாட்டில் பேசிய ருமேனிய பிரதிநிதி கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்போது திட்டமிடப்பட்டுள்ள, நகல் ஒப்பந்தத்தின்படி, அணு ஆயுத உற்பத்தி நாடுகள், இவ்வித சர்வதேச பரிசீலனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளன.

அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபடாத நாடுகள், சமாதான நோக்கங்களுக்காக அணு ஆராய்ச்சி நடத்துவதற்கான உரிமை அளிக்கப்பட வேண்டுமென்பது, ருமேனியாவின் இரண்டாவது ஆலோசனையாகும்.

பத்திரிகையில் முதல் பக்கம் லண்டனிலிருந்து செய்மதிக்கு அஞ்சல் செய்யப்பட்டுப் பின்னர் அங்கிருந்து போர்ட்டோ றிக்கோவில் [illegible] வாகியது.

## காணிகள் கிடைக்கும்

கிளிநொச்சி, வெள்ளி
ஜெயந்திநகர், திருநகர், சிவநகர், உருத்திரபுரம் ஆகிய குடியேற்றப் பகுதியில் வயற் காணியற்ற மக்களுக்கு புது முறிப்புக் குளத்திற்கு அண்மையிலுள்ள அரசாங்கக் காடுகளை விரைவில் கொடுக்குமாறு கிளிநொச்சி எம். பி. கேட்டதற்கிணங்க அண்மையில் இவற்றைப் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்க அதிபரால்மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனிதவதி கொலை வழக்கு

# "அம்மா மதுபானம் பாவிப்பது வழக்கம்; தவருன முறையில் நான் நடக்கவில்லை"

## குறுக்கு விசாரணையில் கொலையுண்டவரின் மகள் சொன்னுர்

— நமது நிருபர் வி. பரராஜசிங்கம் —

குரும்பசிட்டி, வெள்ளி

"காலஞ்சென்ற எனது அம்மா மதுபானம் பாவிப்பது வழக்கம். ஆனல் உடல் நலம் குன்றியிருக்கும் வேளைகளில் தான் மதுபானம் அருந்துவார். சம்பவ தினத்தன்று முழுகிய பின்னர் தேகநிலை சிறிது பாதிக்கப் பட்டிருப்பதாகத் தாயார் என்னிடம் கூறினுர். ஆனல், அன்றைய தினம் சுகவீனமுற்றிருந்த போதிலும், மதுபானம் அருந்தியிருந்தாரா என்பது எனக்குத் தெரியாது. எனது அண்ணன் கொழும்பிலிருந்து சம்பவ தினத்திற்கு ஒன்றரைமாதத்திற்கு முன்னர் அம்மாவுக்கெனச் சாராயம் கொண்டு வந்திருந்தார். இரண்டு, மூன்று தடவைகளில் அம்மா மதுபானம் பருகுவதை நான் நேரில் கண்டிருக்கிறேன். எனது அம்மாவின் இச்செய்கை எனக்குவிருப்பமில்லை. இதனல் எனக்குத் தெரியாதவாறு குடிவகையை வீட்டில் மறைவாக ஒழித்து வைப்பார்."

தொல்புரம் புனிதவதி கொலை வழக்கு இரண்டாவது தடவையாக மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் நேற்று விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட போது தொடர்ந்து சாட்சியமளித்த கொலையுண்டவரின் மகளான சிவஞானதிரு [வயது 21] எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் குறுக்கு விசாரணை செய்யப்படுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

### தவருன முறையில் நடக்கவில்லை

சிவஞானதிரு, தமது சாட்சியத்தின் போது தொடர்ந்து கூறியதாவது;- எனது தந்தை சுமார் 15 வருடங்களுக்கு முன்பு காலமாகி விட்டார் பின்னர் தாயாருடன் தொல்புரத்தில் உள்ள எமது வீட்டில் வசித்து வருகின்றேன். எனது இரு சகோதரர்கள் கொழும்பில் உத்தியோகம் பார்க்கிருர்கள். 1961-ம் ஆண்டில் நான் யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலையொன்றில் சேர்ந்தேன். நான் பாடசாலையில் படிக்கும் வேளையில் கோகிலன் என்ற இளைஞரை எனக்குத் தெரியும். வேலை செய்வதற்காக இவர் எமது வீட்டிற்கு வருவார். இவரது தாயார் சின்னப்பிள்ளையையும் நான் அறிவேன். இவரது தாயாரும் எங்கள் வீட்டிற்கு வருவதுண்டு. எமது வீட்டில் கோகிலன் ஒரு போதும் தங்கியிருந்துபடுத்துறங்கியது இல்லை. 1964-ம் ஆண்டு கோகிலனுடன் தவருன முறையில் நடந்ததாகக் குற்றஞ்சாட்டி பாடசாலையில் இருந்து அதிபரால் விலக்கப்பட்டேன் என்ற கூற்றை நான் மறுக்கிறேன். 1965-ம் ஆண்டில் தொல்புரத்தில் தையல் நிலையமொன்றில் தையல் பழகச் சேர்ந்தேன். எனது சொந்த விருப்பத்தின் பேரில் கடந்த வருடம் தையல் நிலையத்தில் இருந்து விலகி விட்டேன். தையல் பழகிய காலத்தில் பற்குணதேவிக்கும் எனக்கும் சினேகம் ஏற்பட்டது.

சம்பவ தினத்தன்று பொலிசாரிடம் சம்பவம் நடைபெற்ற ஸ்தலத்தில் எதுவிதகடிதத்தையும் நான் ஒப்படைக்கவில்லை. சினேகிதி பற்குணதேவியும் கடிதம் கொடுத்ததை நான் காணவில்லை. தமது பொருட்களை வைப்பதற்கு எமது வீட்டில் 'சேட்' பெட்டியொன்றை பற்குணதேவி வைத்திருந்தார். அப் பெட்டிக்குள் என்ன பொருட்கள் இருந்தனவென்பது எனக்குத் தெரியாது. சம்பவ தினம் ஸ்தலத்திற்குப் பொலிசார் வரு முன்னர் கோகிலன் அவ்விடத்திற்கு வந்தது எனக்கு நினைவில்லை. பற்குணதேவி எமது வீட்டில் இருக்கும்போது தனது மச்சான்மார் வேறு சிலரைக்கொண்டு தன்னைக் கடத்திச் செல்ல முயற்சிப்பதாகவும் இந்த அச்சத்தினல் தனது தாயார் எங்களிடம் பாதுகாப்பிற்காக தன்னை ஒப்படைத்ததாகவும் என்னிடம் சொன்னுர். தேவதாஸ் என்ற வாலிபருடன் தான் தொடர்பு கொண்டிருப்பதாகவோ, இதனல் தனது உறவினர்கள் தன்னைக்கடத்த எத்தனிப்பதாகவோ பற்குணதேவி என்னிடம் எதுவும் கூறவில்லை.

கொலையுண்டஎனது அம்மா விருந்தையில் உள்ள கட்டிலில் வழமையாகப் படுப்பவராயினும் சில வேளைகளில் நிலத்தில் பாய் விரித்து உறங்குவதும் உண்டு. சம்பவ தினம் அம்மாவின் வேண்டுதலின்பேரில் கட்டிலுக்கருகில் நிலத்தில் பாய் ஒன்றினை விரித்து வைத்தேன். அன்று இரவுதாயார் கட்டிலிலோ அல்லது பாயிலோ படுத்திருந்தார என்பது எனக்குத்தெரியாது. இவ்வழக்கில் இவ்வருடம் அக்டோபர் மாதம் 4-ம் திகதி தொல்புரத்தைச்சேர்ந்த ஏ. கிருஷ்ண பிள்ளை, பீ. சுவாமிநாதன், ரீ. திருநாவுக்கரசு, என். தவராசா, ரீ. ஜெயச்சந்திரன், ரீ. விநாயகம் ஆகிய ஆறு பேரும் சுப்பிரமணியம் கைம்பெண் புனிதவதி [வயது 45] என்பவரைக் கொலை செய்ததாகச்சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராஞர். சங்கானைப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சீ. டயஸ், திரு, ரீ. தம்பிரத்தினத்தின் அனுசரணையுடன் வழக்கை நடத்திஞர், வழக்கு விசாரணையைப் பார்க்க கோர்ட்டில் பெருந்தொகையான மக்கள் கூடியிருந்தனர்.

மேல் விசாரணையை நீதிபதி இம்மாதம் 27-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

### புதிய சமாதான நீதிபதி

அளவெட்டி, வெள்ளி

தெல்லிப்பழை, கருகம்பானையைச் சேர்ந்த வைத்தியகலாநிதி திரு. பூ. பொன்னம்பலம் யாழ். மாவட்ட சமாதானநீதவாஞக நியமிக்கப்பட்டுள்ளார். மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரி. எஸ். நெத்தசிங்காமுன்னிலை



யில் இவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இளம் வயதில் மலாயாவில் கல்விகற்ற இவர் அரசினர் உபகாரச் சம்பளம் பெற்று வைத்திய கலாநிதியாகசித்தி பெற்றவர். யுத்த காலத்தில் அம்புலன்ஸ் படைத்தளபதியாகக்கடமையாற்றியவர்.

1948-ல்இலங்கை திரும்பி தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையின் வைத்தியராகக்கடமையாற்றியவர்.

### மாணவருக்கு ஒரு வாய்ப்பு

கல்விப் பொதுத்தராதரப் பத்திர [சாதாரணம்] பரீட்சைக்கு ஆயத்தஞ்செய்யும் மாணவர் பயின்று நன்மையடையும்பொருட்டு "தமிழ்மொழி" 'அ' பாடத்திட்டத்திற்குரிய மாதிரி விஞக்களும் விடைகளும் 22—10—67 தொடக்கம் வாரத்திற்கு இருமுறை 'ஈழநாட்டில்' வெளிவரும். [illegible] தாகவே உங்கள் பிரதிகளுக்குப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

### சுட்டுக்கொலை செய்ய எத்தனித்ததாகவழக்கு

குரும்பசிட்டி, வெள்ளி

சங்கானையைச் சேர்ந்த கதிரேசு வைத்திலிங்கம் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்ய எத்தனித்ததாக எஸ். முருகையா, எம். இரத்தினசிங்கம் ஆகிய இருவருக்கெதிராக குற்றஞ்சாட்டி சங்கானைப்பொலிசார் தொடர்ந்திருந்த வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ரீ. எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டதுஇருஎதிரிகளையும்தலா 500ரூபாபிணை செலுத்தி செல்லுாமறுஉத்தரவிட்ட நீதிபதி நவம்பர் மாதம் 17-ம்திகதி கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார். எதிரிகளுக்காக புரக்டர் ஏ. அன்ரனி ஆஜராஞர். சங்கானைப் பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் வழக்கை நடத்தஆஜராஞர்

### தபாற்பெட்டி அமைக்கப்படும்

சங்கானை, வியாழன்

சங்கானைச் சந்தைக்கும் மது பரிபாலன கந்தோருக்குமிடையில் முக்கிய காரியாலயங்களும், தொழில் நிலையங்களும், தனியார் வியாபார நிலையங்களும் அடங்கியுள்ளதுமானயாழ்ப்பாணம்—காரைநகர் வீதியில் தபாற்பெட்டி ஒன்றை அமைத்துத் தரும்படி சங்கானைப் பட்டினசபை பல வருடங்களாகக் கேட்டுக்கொண்டதன் பேரில் புதிய தபாற்பெட்டி விரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

### இளைஞர் சிரமதானம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை சென். ஜேம்ஸ் பங்கைச் சேர்ந்த இளைஞர் பலர் சேர்ந்து தேவாலயத்தைச் சுற்றியுள்ள வேலிகளை அமைத்தனர். இச் சிரமதான வேலையில் பெரியோர் பலரும் பங்கு கொண்டனர். இதில் கட்டளைக் குரவர் வண. பொமிக்கல் சுவாமியாரும் கலந்து கொண்டனர்.

### பாரதி விழா

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிமேல் வகுப்பு மாணவர்கள் நேற்று முன்தினம் பாரதிவிழாவை கொண்டாடினர். சிறப்புச்சொற்பொழிவாளராக திரு. [illegible] கலந்து கொண்டார்.

### கைக்குண்டு எறிந்ததாக வழக்கு

காலி, வெள்ளி

தனது காருக்குக் கைக்குண்டு எப்படி எறியப்பட்டதென்பதுபற்றி வன்டுறம்பா கிராமசபைத் தலைவர் திரு. ஈ. டி. விக்கிரமதிலக்கா காலி அடிஷனல் மாஜிஸ்திரேட் முன் தெரிவித்தார்.

இவ்வழக்கில் கிராமசபைத் தலைவருக்குக் கைக்குண்டு எறிந்து கொலை செய்ய முயற்சித்ததாக மூவர்மீது அக்மீமன பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சாட்சிகளின் விசாரணைக்குப்பின் தீர்ப்பை இம்மாதம் 26-ம் திகதிக்கு மாஜிஸ்திரேட் ஒத்திவைத்தார்.

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 21-10-67**

[செய்திகள்:-காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00].

344 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை — ரி. கே. சிதராமசாஸ்திரிகள், 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடுபாப்பா.

இரவு 6-15 பாட்டு — என். வீரமணிஐயர், 6-45 கிராமசஞ்சிகை, 7-15 பாவளம், 7-30 குங்குமம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 கருத்தரங்கம், 10-00 நேயர் விருப்பம்.

ராதா மணிமார்க்

சந்தனதிக் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனல் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

# ஹாட்லியை இரு பிரிவிலும் சென். ஜோன்ஸ் தோற்கடித்தது

யாழ்ப்பாணம், சனி

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே சென்.ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்ற சிநேக பூர்வமான 1-ம், 2-ம் பிரிவுகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டிகள் இரண்டிலும் சென். ஜோன்ஸ் கல்லூரி ஹாட்லிக் கல்லூரியைத் தோற்கடித்தது.

கொட்டும் மழையிலும் விடாது தொடர்ந்து நடைபெற்ற இவ்விரு உதைபந்தாட்ட போட்டிகளும் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரையும் ரசிப்பாகவே காணப்பட்டது. முதலில் நடைபெற்ற 2-ம் பிரிவுப் போட்டியில் சென். ஜோன்ஸ் கோஷ்டியைச் சேர்ந்த ஹரிகரன் நவரத்தினராசா ஆகிய வீரர்கள் நன்கு ஆடி சென். ஜோன்ஸ் வெற்றிக்குக் காரணமாக அமைந்தனர். ஹாட்லிக் கோஷ்டியில் முன்னணி வீரர்களின் கோலடிக்கும் முயற்சிக் கட்டங்கள் கவர்ச்சிகரமாக இருந்தன. இப்போட்டியில் சென். ஜோன்ஸ் 3—0 கோல்களால் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைத் தோற்கடித்தது.

இப்போட்டியை அடுத்து ஹாட்லிக் கல்லூரிக்கும் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 1-ம் பிரிவு மோதல் ஆரம்பத்தில் இருந்து முடிவுவரை விறுவிறுப்பாகக் காணப்பட்டது. இரு கோஷ்டியினரும் ஒருவரை ஒருவர் விட்டுக்கொடுக்காமல் அருமையாக ஆடினர். எனினும் இடைவேளைக்கு முன் சென். ஜோன்ஸ் அடுத்தடுத்து 2 கோல்களைப் போட்டது. இடைவேளைக்குப் பின்னர் ஹாட்லி வீரர்கள் ஒரு புது உற்சாகத்துடன் பலமாக மோதி 2 கோல்களைத் தாமும் பெற்றனர். இச்சந்தர்ப்பங்களில் போட்டி நிமிடத்துக்கு நிமிடம் விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்பட்டது.

சென். ஜோன்ஸ் வீரர் ஜெயரட்னம் பாராட்டக்கூடியவர். ஹாட்லியின் முன்னணி வீரர்களின்கடைசிநேர ஆட்டம் அருமையானது. சென். ஜோன்ஸ் மேலும் ஒரு கோல் போட்டு மொத்தம் 3—2 கோல்களால் ஹாட்லிக் கல்லூரியை வென்றது. (விநி)

## சென். பீற்றர்ஸ் வெற்றி

மானிப்பாய், வெள்ளி

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் கோஷ்டிக்கும், நவாலி சென் பீற்றர்ஸ் கோஷ்டிக்குமிடையில் நடந்த சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பீற்றர்ஸ் கோஷ்டியினர் 4—3 கோல்களால் வெற்றியீட்டினர் இப்போட்டிக்குத் திரு. ஸ்ரீதரன் மத்தியஸ்தம் வகித்தார்.

'நொக்கவுட்' உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# குருநகர் சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் பாஷையூர் சென். அந்தனிஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் குருநகர் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற 'நொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் போட்டியில் குருநகர் 3—1 கோல்களால் பாஷையூரை வென்றது.

இப் போட்டியில் குருநகர்

[6-ம் பக்கம் பார்க்க]

தீபாவளி

பண்டிகையை முன்னிட்டு

விசேஷ மலிவு விற்பனை

நடைபெறுகின்றன.

ஸம்ஸியா

1/3, மின்சாரநிலையவீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்.

298

முக்கிய அறிவித்தல்

SHELL

ஷெல்

யாழ்ப்பாணக் குடாநாட்டுக் கமக்காரர்களின் வசதியை முன்னிட்டு, கீழ்காணும் ஸ்தாபனத்தை கூடுதலான புதிய பிரதான கையிருப்பாளர்களாக நியமித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்:

றேயல் டிஸ்பென்சரி,

இல. 270, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

ஷெல்விவசாய ரசாயனப்பொருட்கள் யாவற்றுடனும், "என்றெக்ஸ்" 20. "பொஸ்றின்", "பிட்றின்", "சுமித்தியன்", ஷெல் களைப்புற கொல்லி 'ஆர்', ஷெல் களைப்புற்கொல்லி "எம்" - 50, ஷெல் பீ.எச்.சி. 10% தூள் ஆதியனவும் இந்த ஸ்தாபனத்திடம் இப்பொழுது கிடைக்கும்.

SHELL

ரசாயனப் பொருளை நினையுங்கள் ஷெல்லை நினையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

லொறி:

லோட்மாஸ்டர் லொறி CL 8752 நல்ல நிலைமையில். விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடுக. க. ஐயாத்துரை, மரக்காலை, கந்தசுவாமி கோவிலடி, இணுவில். 2558

### தேவை

கட்டிடக் காணி

50, பரப்பு கட்டிடக்காணி விலைக்கு உடன் தேவை. யாழ்ப்பாணம் குடாநாட்டில் வீடுகட்டக் கூடியதாயும், பஸ் போக்குவரத்து பாதைக்கு அண்மையிலும், விலை 500/- ரூபாவுக்கும், 2000/- ரூபாவுக்கும் இடையில் உள்ளதாய் இருத்தல் வேண்டும். விற்க விரும்புவோர்: H. P. T. பிரதிநிதி த. வடிவநாதன் 'பூகன்ஸ், 71, மின்சாரநிலைய வீதி' யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திற்கு நேரடியாக தொடர்புகொள்ளவும். 2264

ஏஜன்ட்

கரவெட்டிப் பகுதிக்கு புது அங்கத்தவர்களைச் சேர்க்கவும், பணம் அறவாக்கித் தலைமைக்கந்தோருக்கு அனுப்பவும் தக்க ஏஜன்ட் ஒருவர் தேவை. 31-10-67 முன் விண்ணப்பிக்கவும். அந்தியகாலச் சகாயப்பணம் கட்டுகிறவர்கள் சகாயப் பணமாக மாதம் இரண்டு ரூபா வீதம் கட்டவேவேண்டும். அ. கார்த்திகேசு, கௌரவ காரியதரிசி, யாழ். விவாக அந்தியகால சேமலாப நிதிச்சங்கம், இல. 11/Q மொம்சாக் மாளிகை, யாழ்ப்பாணம். 2268

### தேவை

விற்பனையாளர்கள்

வீடுகளுக்கு சென்று தரமான பொருளை விற்பனை செய்வதற்கு படிப்பறிவுள்ள இளைஞர்கள்தேவை. முயற்சியுள்ளவர்கள் நல்ல ஊதியத்தை எதிர்பார்க்கலாம். தொடர்பு கொள்க: நந்தி இன்டஸ்றீஸ் அன்ட் ஏஜென்சீஸ் லிமிடெட், 20, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2265

## சமமான முடிவு

உடுப்பிட்டி, வெள்ளி

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி மூன்றும் பிரிவுக் கோஷ்டியினரிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இரு கல்லூரியினரும் தலா ஒரு கோல் வீதம் போட்டனர். இதனால் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுற்றது. இரு கோஷ்டியினரும் தமது திறமையான விளையாட்டினால் ரசிகர்களின் பாராட்டைப் பெற்றனர். திரு. கே. பாலேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஜெய்சங்கர்
நடித்த
நாம் மூவர்

மனோகரா
யாழ்ப்பாணம்
Daily at
4-45, 7-00, 9-45
GO TO
BLAZE

REGAL JAFFNA
Time 4-45 7-00 p. m.
9-45 p. m.
Victor Buono
in
THE
STRANGLER
(Adults Only)

3-வது குதூகல வாரம்!
கிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை]
பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
விஜயா [மட்டுநகர்]
ஸ்ரீகிஷ்ணா [திருமலை]
தினசரி பி. ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
ராஜ் [நீர்கொழும்பு]
மற்றும் 4 திரைகளில்!
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி
ஜனாதிபதியின் பரிசு பெற்று அநேகரின் பாராட்டையும்
பெற்ற உணர்ச்சியூட்டும் சித்திரம்!
ஜெய்சங்கர் - நாகேஷ் - சுந்தரராஜன்
ஜமுனா - ஷோபா - ஜி. வரலக்ஷ்மி
பேபி பத்மினி இருவேடங்களில் நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்
குழந்தையும் தெய்வமும்
டைரக்ஷன்: கிருஷ்ணன் பஞ்சு
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

# 'முழுச் சம்பளத்தையும் ஒருவர் இரகசியமாக தந்துவிட்டார்'

## கோடீஸ்வரன் கூறுகிறார்

மன்னார், வெள்ளி

நீர்ப்பாசன இலாகாவை சேர்ந்த திரு. சிவசுப்பிரமணியம் என்பவர் தமது ஒரு மாத முழுச் சம்பளமாகிய 375 ரூபாவையும் தம்மிடம் இரகசியமாகத் தந்துள்ளதாக அரசாங்க எழுதுவினைஞர் சங்கப் பொருளாளர் திரு. செ. கோடீஸ்வரன் மன்னார் நகரமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கோடீஸ்வரன் வழக்கை பிரிவிக்கவுன்சிலுக்கு எடுத்துச் சென்று வழக்காடுவதற்கான செலவுக்கு ஆதரவு தேடுவதற்காக திரு. வி. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு கோடீஸ்வரன் மேலும் கூறியதாவது:

பிரிவிக்கவுன்சிலில் நாம் வெற்றி பெறுவோமோ இல்லையோ என்பது சொல்ல முடியாது.

55 வயதுவரை கட்டாய ஓய்வு தேவையில்லையென்று கூறிய அரசாங்கம் இன்று எம்மைப் பாதிக்கக்கூடிய செயல்களைச் செய்துவருகிறது. தமிழ்ப் பிரதிநிதிகளின் உதவியுடன் இயங்கும் தேசிய அரசாங்கம் முன்னைய அரசாங்கம் கொண்டுவந்த கொள்கைகளை எவ்வித மாற்றமுமில்லாது நடத்துகிறது. எமது மூன்று கொள்கைகளிலும் வெற்றி எமதேயெனக் கருதுகின்றோம்.

யாழ்ப்பாண உத்தியோகத்தர்கள் தமது சம்பளத்தில் பாதி தர முன்வந்துள்ளார்கள் என்பதையும் இங்கு குறிப்பிடவிரும்புகின்றேன்.

தனிச்சிங்களத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வேறு இனத்தைச் சேர்ந்த பல ஊழியர்களும் நிதி உதவி வழங்கியுள்ளதாகவும் திரு கோடீஸ்வரன்தெரிவித்தார்

திரு. கந்தசாமி தமது தலைமையுரையில், பிரிவிக்கவுன்சில் வழக்குச் செலவுக்குச் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரை தேவைப்படுமெனக் குறிப்பிட்டார்.

---

### 25-ம் திகதிக்கு முன் அனுப்பவேண்டும்

சென்னை, அக்.20

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவிருக்கிறது. கட்டுரை தமிழ் மொழியின் வளம் பற்றியும் நாகரீகக் கலைகள் பற்றியுமிருப்பது வரவேற்கத்தக்கதுஎனதமிழக ஸ்தலஸ்தான அமைச்சர்திரு. முத்துச்சாமிதெரிவித்துள்ளார்.

கட்டுரை ஒவ்வொன்றும் 1500 சொற்களுக்குள் இருத்தல் வேண்டுமெனவும் இம்மாதம் 25-ம் திகதிக்கு முன்னர் அமைப்புச் செயலாளர், இரண்டாவது உலகத்தமிழ் கருத்தரங்கு, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் தமிழக அரசு. சென்னை9 என்ற விலாசத்திற்கு அனுப்பும்படியும் அமைப்பாளர் கோரியுள்ளார்.

### குருநகர்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கோல்களைப்போட்ட போதிலும் இரு சாராரும் சமபலத்துடன் மோதியது போட்டிக்கு விறுவிறுப்பைக் கொடுத்தது. குருநகருக்குக் கிடைத்த பனல்டியைப் பயன்படுத்திய கனியூட், மரியநாயகம், சந்தியாகோ, கோல்காப்பு வீரர் புவிராசசிங்கம் ஆகியோரும் பாஷையூர் கோஷ்டியில் பாலேந்திரன், காப்டன் மரியநாயகம், பனன்டோ ஆகிய வீரர்களும் ரசிகர்களின் பாராட்டுக்கு இலக்கானார்கள்.

இவ்விரு கோஷ்டிகளும் சமபலத்துடன் மோதிய இப்போட்டி யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டத்தின் தரத்தை மேலும் உயர்த்திவிட்டதென பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை குறிப்பிட்டார். யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு. ஈ. கனகலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

[வி. நி]

### கொழும்பில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தூக்கி எறியப்பட்டுவிட்டது. அதனால் பாடசாலை மூடப்பட்டுள்ளது. நகரிலுள்ள பல பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன.

**நிவாரணம்**

வெள்ளத்தினாலும் பழையினாலும் பாதிக்கப்பட்டமக்களுக்கான நிவாரணவேலைகளில்சமூகசேவைகள்இலாகாவும்சமூகநல ஸ்தாபனங்களும் ஈடுபட்டுள்ளன.

**விமானசேவை ரத்து**

இலங்கையிலிருந்து செல்லும் எல்லாவிமானங்களும் தடுக்கப்பட்டுள்ளன. காலநிலை சீராகும்வரை விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளன.

கொழும்பில் பல இடங்களில் மரங்கள் சரிந்துவிழுந்தன. தந்தி சேவைகளும் தடைபட்டன.

---

### 'முல்லைத்தீவு....

[-1ம் பக்கத் தொடர்ச்சி]

க்கி உடன் அதில் ஒரு முடிவை எடுத்துவிடுகிறார்கள். ஆனால் கண்ணன் மரணத்தில் சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் தாமதமேன்? உடன் பொலிஸாரைத் தூண்டி நடவடிக்கை எடுங்கள்.

## ஆட்சேபிக்கும்

கொழும்பு, வெள்ளி

பர்மா தூதர் பூன்வா விவகாரம் பற்றி தலையிட வேண்டாமென பர்மா அரசாங்கம் தெரிவித்திருந்த போதிலும் அவர் இலங்கையில் மீண்டும் தூதராகவோ, தூதராலயத்தில் வேறு உத்தியோகத்தராவோ நியமிக்கப்படுவதை இலங்கை அரசாங்கம் ஆட்சேபிக்கும்.

---

## பஸ்ஸுக்குள் குடை பிடித்தனர்

யாழ்ப்பாணம், சனி

வெளியில்தான் மழை பெய்துகொண்டிருக்கிறதென்றால், பஸ்ஸுக்குள்ளும் பிரயாணிகள் குடைகளைப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கேரதீவுக்குச்சென்றஒருபஸ்ஸில்நேற்றுஇந்தசம்பவம்நடந்தது. பஸ்ஸுக்குள் மழை நீர்கொட்ட ஆரம்பித்ததால் பிரயாணிகள் இப்படி கஷ்டத்துக்குள்ளாகினார்கள். பலர் நனைந்துகொண்டே பிரயாணம்செய்தனர்.

---

## தீண்டாமைஒழிப்பு மகாநாடு

யாழ்ப்பாணம், சனி

ஆலயப்பிரவேசம், தேநீர் கடை பிரவேசம் செய்வதற்கான இடங்களும் திகதிகளும், இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மகாநாட்டில் பிரகடனம் செய்யப்படுமென தெரியவருகிறது.

யாழ்ப்பாண மாநகர மண்டபத்தில் தியாகி சின்னர் கார்த்திகேசு அரங்கில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இம் மகாநாட்டில் திரு. என். சண்முகதாசன், ஒரேட்டர் சுப்பிரமணியம், திரு. கே. வைகுந்தவாசன், டாக்டர் குரசட் தம்பையா, அட்வகேட் எம். எஸ். கனகரத்தினம், திரு. அல்பிரட்துரையப்பா ஆகியோர் விசேடப் பிரதிநிதிகளாக கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார்கள்.

காலையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க அறிக்கையும், அதையொட்டிய விவாதமும் நடைபெறும். நான்கு முக்கிய தீர்மானங்கள் சமர்ப்பிக்கப்படும்.

பிற்பகல் நிகழ்ச்சியின் போது, வடபகுதியிலும், தென் பகுதியிலும் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்ட வல்லுனர்கள் கலந்து கொள்வார்கள்.

---

### ஆசிரிய பிரதிநிதி

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

கல்வி விஞ்ஞான கலாச்சாரத்தாபனம்—சர்வதேச தொழிற்தாபனம் ஆகியவற்றின் சிபார்சுகள் இலங்கை உட்பட முப்பது நாட்டுப் பிரதிநிதிகளினால் ஏறக்குறைய பத்துவருட முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்டதெனவும் ஆசிரியர்களின் ''மகாபட்டயமாக''க் கருதப்படும் இச்சிபார்சுகளை அரசாங்கம் ஏற்று சட்டரீதியாக நடைமுறைக்குக் கொண்டு வருவார்களானால் ஆசிரிய சமூகத்திற்கும் நாட்டின் கல்விச்சேவைக்கும் ஓர் நிலைபரமான அத்திபாரமிட்டவர்களாவார்களெனவும் கூறப்பட்டது.

இந்த அடிப்படைக்கோரிக்கைகளைப் பெறுவதற்கு எம். பி. க்கள், பாராளுமன்றத் [illegible] உதவிகளையும் [illegible] கள்.

# 'அந்த குழந்தை என்னுடையது அல்ல'

## ஜீவனும்ச வழக்கில் எதிரி சாட்சியம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

துன்னாலை தெற்கைச் சேர்ந்த சரஸ்வதி என்ற பெண்மணி தனது கணவனை துரையன் சந்திரன் என்பவரிடமிருந்து ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

துரையன் சந்திரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் சரஸ்வதியை விவாகம் செய்யவில்லை. 8-11-65 இல் அவரைக் கூட்டிக் கொண்டு சென்று காதலித்து விவாகம் செய்யப் போவதாக பொலிஸ் நிலையப் புத்தகத்தில்கையொப்பமிடவுமில்லை. அவர் வைத்திருக்கும் குழந்தை என்னுடையதுமல்ல. நான் அவர் வீட்டில் சென்று வாழ்ந்தது கிடையாது. கடந்த எட்டு மாதத்திற்கு முன்னர் தான் மாசிலாமணி என்ற பெண்ணை பதிவு செய்து திருமணம் செய்தேன்.

இன்ஸ்பெக்டர் திரு. வி. செல்லையா, வி. சூரிப்பிள்ளை ஆகியோர் சாட்சியமளித்த பின் மாஜிஸ்டிரேட் தீர்ப்பளிப்பதை இம்மாதம் 26-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

---

### எம். ஜி, ராமச்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞர் திரு. பி, கே. கோகுலகிருஷ்ணன் வாதம் ஆரம்பமாகியது,

அரசாங்க தரப்பு வழக்கறிஞர் கூறிய தாவது:-

பட அதிபர் வாசுவுக்காக பணம் கடன் வாங்குமளவுக்கு ராதாஇருந்திருக்கிறார் என்பதிலிருந்து வாசு ராதாவுக்குவாசுமிகவும்நெருங்கிய நண்பராக இருந்திருக்கிறார் என்பது தெரியவருகிறது தான் சொல்வதை வாசு நம்புவார் என்பதையும் ராதா தெரிந்து வைத்திருக்கிறார். அதனால் தான் படமெடுப்பது சம்பந்தமாக கோயம்புத்தூர் கோஷ்டி எம். ஜி. ஆருடன் தொடர்பு கொள்ள விரும்புகிறதென்ற கற்பனைக் கதையொன்றை வாசுவிடம் கூறி அந்தப் போர்வையில் எம். ஜி. ஆரைக் கொல்ல ராதா திட்டமிட்டிருந்தார்.

கோயம்புத்தூர் கோஷ்டிசம்பந்தமாக வாசுவிடம் ராதாடூப் அடித்து எம். ஜி, ஆர். வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். இதன்படி எம். ஜி. ஆர். தோட்டத்திலுள்ள, வீட்டு வரவேற்பு அறையில் வைத்தே இந்த அருவருக்கத்தக்க செயலை ராதா செய்துள்ளார். எம். ஜி. ஆரைச் சுட்டு விட்டு தானும் இருதடவை தன்னைத்தானே சுட்டுதற்கொலை செய்ய முன்றிருக்கிறார். பின்னர் வரவேற்பு அறையை விட்டுவெளியேறிதனது இரவுக்காவலாளர் முத்து நாடாரிடம் 'சுட்டாச்சு சுட்டாச்சு' என்று கூறியிருக்கிறார். தன்னை யாராவது சுட்டுவிட்டார்கள் என்பதைத் தெரிவிக்க வெண்டுமென்றால், 'சுட்டுட்டாங்கள் சுட்டுட்டாங்கள்' என்றல்லவா சொல்லியிருக்க வேண்டும். சம்பவத்துக்குப் பிறகு ராதா முதலில் சென்றதாக்க் கூறப்படும் பொலிஸ் நிலைய இஸ்பெக்டரிடம் தன்னை எம். ஜி. ஆர். சுட்டுவிட்டார் எனத் தெரிவித்திருக்கிறார். ஆனால் எம். ஜி. ஆர். தோட்டத்தில் யார் சுட்டார்கள் என்றுகேட்டபோது, ராதா எவ்வித பதிலும் தெரிவிக்கவில்லையாம். ஆனால் எம். ஜி. ஆர். சாகவில்லை என்பதைத் தெரிந்துகொண்ட பின்னர்தான், எம்.ஜி.ஆர். சுட்டார் என்று ராதா கூறினார் என்பது தெளிவாகிறது. துப்பாக்கி நிபுணர் தமது அறிக்கையில் ராதாவின் றிவால்வரே உபயோகிக்கப்பட்டதென்பதை நிரூபணமாகத் தெரிவித்துவிட்டார்.

## சங்கானை கொலை முயற்சி வழக்கு

யாழ்ப்பாணம், சனி

சங்கானை கொலை முயற்சி வழக்கில் நேற்று காலை மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. நெத்சிங்கா முன்னிலையில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில் சங்கானையை சேர்ந்த சின்னத்தம்பி முருகையா, மாணிக்கம் இரத்தினசிங்கம் ஆகியோர், கார்த்திகேசு வைத்திலிங்கத்தை துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாக சங்கானை பொலிஸாரால்குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் புறக்டர் ஏ. அன்ரனி ஆஜரானார். வழக்காளி சார்பில் புறக்டர் ஆர். ஜே. செல்வரத்தினம், பொலிஸாரின் உதவியுடன் ஆஜரானார். மாஜிஸ்திரேட், நவம்பர் 17-ம் தேதி விசாரணையை ஒத்திவைத்தார்.

---

## வியட்னும் ஆதரவுக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

வடவியட்னும்மீது குண்டு வீசுவதை உடனடியாக நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை ஆதரிக்குமுகமாக இன்று பிற்பகல் யாழ்ப்பாணம் கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்தில் திரு. சி. நடராசா தலைமையில் ஒரு கூட்டம் நடைபெறவிருக்கிறது. திருவாளர்கள் ஐ. ஆர். அரியரத்தினம், எம். சி. சுப்பிரமணியம் உட்பட பலரும் பேசுவார்கள்.

---

## விசாரணைக்குழு நியமனம்

கொழும்பு, வெள்ளி

அண்மையில் சர்வகலாசாலை மாணவர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்குமிடையில்ஏற்பட்டஅசம்பாவிதங்கள் சம்பந்தமாகவிசாரணை செய்ய மூன்றுபேர் கொண்ட விசாரணைக்குழு ஒன்று வித்தியாலங்கார சர்வகலாசாலை சபையினரால் நியமிக்கப்பட்டுள்ளது.

---

### மாதம்ரூ.65செலுத்தும்படி தீர்ப்பு

வல்வெட்டித்துறை வெள்ளி

பருத்தித்துறையைச் சேர்ந்த கணேசலிங்கம் பெண் ரேவதி தனது கணவனிடமிருந்து ஜீவனும்சம் கோரி தொடரப்பட்ட வழக்குமாஜிஸ்திரேட் திரு. கே.விக்னராசா முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியான கணேசலிங்கத்தை மாதா வீதம் 65 ரூபா ஜீவனும்சப் பணமாகக் கட்டும்படி உத்தரவிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் ஐக்கிய நாடுகள் தினம்

யாழ்ப்பாணம், வெள்ளி

அடுத்த மாதம் 3-ம் திகதி ஐக்கிய நாடுகள் தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. வடபகுதி அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெறும் இவ்விழாவிற்கு ஐக்கிய நாடுகள் சங்க பிரதிநிதியான திரு. அனற்றெலி கிறமோவ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். பாடசாலைகளுக்கிடையேயான கருத்தரங்கொன்று விழாவில் விசேஷமாக இடம்பெறவிருக்கின்றது.

[ந. நி.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org